திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதியில் உள்ள வையம்பட்டி தெற்கு ஒன்றிய திமுகவின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கோமாளித்தனமான எதிர்க்கட்சித் தலைவரின் செய்கை!

மணப்பாறையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் சாடல்!

மணப்பாறை,நவ.27-

திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதியில் உள்ள வையம்பட்டி தெற்கு ஒன்றிய திமுகவின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியபோது, மேயராக இருந்த போது அவரது நிர்வாகத் திறமையை பார்த்து முத்தமிழ் அறிஞர் கலைஞரால் நற்பெயர் பெற்றவர் தான் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர். மா.சு. என்று சுருக்கமாக சொல்வார்கள். மாசு என்பதை கலைஞர் பாணியில் சொன்னால் மானமுள்ள சுயமரியாதைக்காரன் என்றுதான் சொல்ல வேண்டும். என்றார். திராவிட மடல் ஆட்சியின் பல்வேறு அரசு திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார் .

பின்னர் அமைச்சர் மா. சுப்ரமணியன் பேசிய போது.

சட்டமன்ற சிறப்புக் கூட்டம் ஆளுநர் திருப்பி அனுப்பிய தமிழர் நலன் சார்ந்த பத்து மசோதாக்களை மீண்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைத்தால் அதை ஆளுநர் வேறு வழி இன்றி ஒப்புதல் தந்தே ஆக வேண்டும். அதில் இரண்டு மசோதாக்கள் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்தபோது 2020 ஆம் ஆண்டு நிறைவேற்றி அனுப்பிய இரண்டும் மசோதாக்களும் அடங்கும். அதில் ஒன்று மீன்வள பல்கலைக்கழகம். அதற்கு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பெயரைச் சூட்டி அதற்கு ஒப்புதல் பெறவேண்டும். ஆனால் பாஜகவினரை நம்பி அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் அவர்களால் பாஜகவினரின் ஏஜெண்டாக செயல்படும் ஆளுநரிடம் கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் பெறமுடியவில்லை. முதலமைச்சர் எந்த ஒரு இடத்திலும் ஜெயலலிதாவின் பெயரை எடுக்க கூடாது என்று உறுதியாக இருக்கின்றார். அத்தகைய பெருந்தன்மைக்கு உதாரணம் ஒருவர் உண்டு என்றால் அது நமது முதல்வர் தான். அதனால் தான் மீன் வளத்துறை பல்கலைக்கழகத்திற்கு ஜெயலலிதாவின் பெயரை வைக்கும் அந்த மசோதாவையும் நிறைவேற்றி ஆளுனருக்கு அனுப்பியுள்ளார். எதிர்க் கட்சித் தலைவர் இந்த தகவலை கூட தெரிந்து கொள்ளாமல் அதனை முழுமையாக படிக்காமல் ஜெயலலிதாவின் பெயரை நீக்கி விட்டீர்கள் என்று கூறி வெளிநடப்பு செய்தார். இதைவிட ஒரு கோமாளித்தனமான செய்கை எதிர்கட்சித் தலைவருக்கு இருக்க முடியாது என எடப்பாடி பழனிச்சாமியை சாடினார்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.எம். சபியுல்லா, மாவட்ட நிர்வாகிகள் கோவிந்தராஜன், மூக்கன், லீலாவேலு, செங்குட்டுவன், குணசேகரன், வையம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் குணசீலன், மாவட்ட கவுன்சிலர் தேக்கமலர் செல்வம், ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உதயநிதிஸ்டாலின் பிறந்தநாளை

திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடுவீர்!

மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை !

நெல்லை, நவ. 26-

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர், கழகதலைவர், ஆகியோர்கள் வழியில் பெரியார், அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் கண்ட கனவினை நனவாக்கும் வண்ணம், நாளும் உழைத்து வருகின்ற சனாதனத்தை எதிர்த்து நாளும் குரல் கொடுத்து வருகின்ற இந்திய இளைஞர்களுக்கு ஒரு இளைய தலைவர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு உதாரணமாக இருக்ககூடிய நம் கழக இளைஞரணி செயலாளர் இளை ஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாள் 27.11.23 ஆகும்.

அவருடைய பிறந்த நாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாடும் வகையில் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர, பேரூர் கிளை, வார்டு பகுதிகள் அனைத்திலும் உள்ள கழக நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட, சார்புஅணிகளின் நிர்வாகிகள் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும் மற்றும் ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மக்கள் இளைஞர்கள், மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடிட கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு மேற்கு ஒன்றியத்தில் இளைஞர் அணியின் 2 வது மாநில மாநாட்டை முன்னிட்டு நடைபெற்ற இருசக்கர வாகன வரவேற்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் – மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் முன்னிலையில் அதிமுகவில் இருந்து விலகி 30க்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்தனர்.உடன் மாநில விவசாய அணி துணை செயலாளர் கூடப்பட்டி.சுப்ரமணி,மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி,பாலக்கோடு மேற்கு ஒன்றிய செயலாளர் பி.கே.அன்பழகன்,காரிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் எம்வீடி.கோபால்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையேற்று திருமணங்களை நடத்தி வைத்து சீர்வரிசை பொருட்களை வழங்கினார். இதில் சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் உதவி ஆணையர் அன்னக்கொடி, காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே. சிவானந்தன் உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கரூர் மாவட்டத்திற்கு வருகை தரும்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கரூர், நவ.27-

டிசம்பர் 3ஆம் தேதி கரூரில் நடைபெறும் கரூர் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பளிப்பது என கரூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 25.11.2023 அன்று கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் கரூர் மாவட்டக் கழக செயலாளரும் தமிழ்நாடு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி ஆலோசனைபடியும், நடைபெற்றது.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன்,

குளித்தலை சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நாமக்கல் ராணி, அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், கரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பனப்பட்டி கே.தினகரன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என். செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி. கருப்பண்ணன், என்.எஸ். ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி. சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம். சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்பிரமணியன், ஆர்.எஸ். ராஜா, ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என்.மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி. வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம். ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், சி.கதிரவன், எல்.கரிகாலன், அ.சந்திரன், ப.தியாகராஜன், இ.ராமர் (முன்னாள் எம்.எல்.ஏ), ஜி.அண்ணாதுரை, நகர செயலாளர்கள் அ.வாசிம் ராஜா, ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம். சசிக்குமார், ஆர்.மோகன் ராஜ், இ.ரவீந்திரன்,எம். முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் எம்.எல்.ஏ.காமராஜ், எஸ்.காமராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 03.12.2023 அன்று கரூரில் நடைபெற உள்ள கரூர் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான முறையில் வரவேற்பு அளிப்பது என இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

03.12.2023 அன்று கரூரில் நடைபெற உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு 10,000க்கும் மேற்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் இளைஞர் அணி சீருடையுடன் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பாக நடத்துவதென்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

17.12.2023 அன்று சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் சென்று மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் "நீட் விலக்கு, நம் இலக்கு" என்ற மாபெரும் மக்கள் கையெழுத்து இயக்கத்தில் இளைஞர் அணி, சார்பில் ஒரு இலட்சம் கையெழுத்தினை கரூர் மாவட்டத்தில் இளைஞர்கள். மாணவர்கள் மற்றும் மாணவிகளிடத்தில் பெற்று தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைப்பதென இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்"

சிறப்பு புகைப்படக் கண்காட்சி 3 நாட்கள் நடைபெறும்!

தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிவிப்பு

சென்னை கலைவாணர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "நிறுவனங்களின் நாயகர் - கலைஞர்" சிறப்பு புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டு நேற்று (25.11.2023) தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு பொருளாதாரத்தில் முன்னணி மாநிலமாக திகழ பல்வேறு நிறுவனங்களைத் தொடங்கி, சிறப்பாக நடைபெற காரணமாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை அறிந்து கொள்ள உதவும் இந்த புகைப்படக் கண்காட்சியை பொது மக்கள் பார்வையிடும் வகையில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் என தலைமைச் செயலாளர் சிவதாஸ்மீனா அறிவித்துள்ளார்.

நாகை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன் தலைமை தாங்கி பேசினார். உடன் மாவட்ட அமைப்பாளர்கள் இளைஞர் அணி பி.என். கார்த்தி, ப.உதயக்குமார், அ.பாரிபலன் மற்றும் பலர் உள்ளனர்.